අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/5/7
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2022.04.08

**சுற்றுநிருபத்தின் இலக்கம் : 19 / 2022**

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயப் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயங்களுக்குப் பொறுப்பான பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல அதிபர்கள்

**கல்வி அமைச்சு மற்றும் டவர் மண்டப அரங்க மன்றமும் இணைந்து நடாத்தும் அகில இலங்கை சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி - 2022**

**01. அறிமுகம் :**

கல்வி அமைச்சு மற்றும் டவர் மண்டப அரங்க மன்றம் ஆகியவற்றினால் நூர்த்தி நாடகக் கலையின் முன்னேற்றம் குறித்தும்,குறு நாடகம் மற்றும் நீண்ட நாடகக் கலையின் சீரான உயர்ச்சி குறித்தும் சௌந்தர்ய கலைகளை இரசித்து அனுபவித்து மகிழ்ச்சி அடைகின்ற ஒரு மக்கள் சமுதாயத்தை மேன்படுத்துகின்ற நோக்கத்துக்குமாக இகில இலங்கை சிங்களம் மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டி வருடந்தோறும் நாடு முழுவதிலும் உள்ளடங்கியவாறு ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டு வருகின்றது.
இந்தப் போட்டியை ஏற்பாடு செய்து நடத்துவதன் ஊடாக பாடசாலை மாணவர்களின் பாடல்பாடுகின்ற வாத்தியங்களை வாசிக்கின்ற, நடனம், நடிப்பு மற்றும் இவை சார்ந்த சௌந்தர்யத் துறையில் ஆர்வமும் ஆக்கத்திறனும் கொண்டுள்ள மாணவர்களை இனங்காண்பதற்கும், இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் பாரம்பரிய நாடகங்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கும், நாடகம் மற்றும் அரங்கியல் கலைகளின் எதிர்கால வளர்ச்சிக்கும் இது பெரிதும் உதவும். அத்துடன் இவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள ஆசிரியப் பெருந்தகைகளின் அறிவையும் அதிகரித்துக் கொள்ள முடிகின்றது.

கலை ஆர்வமும் ஆக்கத் திறனும் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களை நம் நாட்டிற்கு இந்தப் போட்டி அறிமுகப்படுத்தியுள்ளது. கோவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாகப் பாடசாலை கட்டமைப்பு பாதிக்கப்பட்ட காரணத்தினாலும், தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதனாலும் இந்த வருடம் போட்டி மட்டுப்படுத்திய மட்டத்தில் நடாத்தப்படுகின்றது. 8 தசாப்தங்களாக இடையறாது தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருகின்ற இந்தப் போட்டி, இம்முறை கல்வி அமைச்சு, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மறறும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, டவர் மண்டப அரங்க மன்றம் மற்றும் சைல்ட் பன்ட் நிறுவனம் ஆகியவற்றின் ஒருங்கமைப்பில் ஏற்பாடாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ள இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகின்ற டவர் மண்டப அரங்க மன்றம், 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு ஏற்புடையதான தலைப்புக்களில், குறு மற்றும் நீண்ட நாடகங்களை நடாத்தி சுதந்திர தின விழாவுக்கு பெருமையை ஏற்படுத்துவதற்கு தயாராகிவருகின்றது.

**02. நோக்கம் :**

2.1. சிங்கள மற்றும் தமிழ் பாடசாலை முறைமைகளில் நூர்த்தி நாடகத்தை ஊக்குவித்தல்

2.2 பாடசாலை மாணவ சமூகத்தின் படைப்பாற்றல், ஆளுமை வளச்சி, அறிவு, அணுகுமுறைகள் மற்றும் திறன்களை மேம்படுத்தல்.

2.3 படைப்பாற்றல்மிக்க, இரசனையுள்ள மற்றும் பெருமைமிக்க குடிமக்களை நாட்டிற்கு வழங்குதல்.

2.4 மாகாண மட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள். விருதுகளும் பரிசில்களும் வழங்கும் நிகழ்வு அன்று வழங்கப்படும்.

2.5 தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும், விருதுகளும், பணப்பரிசில்களும் வழங்கப்படும்.

2.6 தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற சிறந்த நாடகங்களை அழைத்து நாடக விழா மேற்கொள்ளப்படும்

## 03 போட்டிப் பிரிவுகள் :

3:1 சிங்கள் மொழி மூல பாடசாலைகளுக்கு

3:1:1 (நூர்த்தி) நாடகக் காட்சிகள்

3:1:2 குறு நாடகங்கள் (தேசத்தின் மாண்பையும், சுதந்திரத்தின் பெருமையையும் உள்ளடக்கமான கருப் பொருளைக் கொண்ட நாடகமாக அமையப் பெற வேண்டும்.)

3:1:3 நீண்ட நாடகங்கள் (தேசத்தின் மாண்பையும், சுதந்திரத்தின் பெருமையையும் உள்ளடக்கமான கருப் பொருளைக் கொண்ட நாடகமாக அமையப் பெற வேண்டும்.)

3:2 தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு

3:2:1 குறு நாடகங்கள் (தேசத்தின் மாண்பையும், சுதந்திரத்தின் பெருமையையும் உள்ளடக்கமான கருப் பொருளைக் கொண்ட நாடகமாக அமையப் பெற வேண்டும்.)

## 04 போட்டிக்கான நிபந்தனைகள் :

4:1 குறு நாடகங்கள் (சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு)

4:1:1 சிங்கள அல்லது தழிழ் மொழி மூலம் எழுதப்பட்ட, பாடசாலை மாணவ மாணவிகளின் ஆளுமை வளர்ச்சிக்குத் துணை புரியும், மனதுக்குகந்த, பாடசாலை சூழலுக்குப் பொருத்தமான படைப்பாற்றலுடைய சுய பிரதிகள் கட்டுரை வடிவுடன் கூடிய தயாரிப்பாக இருக்க வேண்டும்.

4:1:2 மொழி பெயர்ப்பு அல்லது தழுவல்களை முன் வைக்க முடியாது.

4:1:3 புதிய நடிப்பு மாதிரிகள், கைவினை செயல் முறைகள் மற்றும் தொழிநுட்ப அம்சங்களை பயன்படுத்தலாம்.

4:1:4 சிறுவர் நாடகங்களாக இருக்கக் கூடாது.

4:1:5 திரை அழைப்புடன் கூடிய (Curtain Call) நடிப்புக்கான காலம் 25-30 நிமிடங்களாகும்.

4:1:6 A4 அளவுடைய தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கணனி எழுத்துருக்கள் சேர்க்கப்பட்ட அல்லது தெளிவான கையெழுத்துக்களால் எழுதப்பட்ட நாடகத்தின் 2 பிரதிகள் பிரதேச மட்டத்திலான போட்டியின் போது நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4:2 (நூர்த்தி) நாடகக் காட்சிப் பிரிவு

4:2:1 சிங்கள மொழி மூலம் இந்த நாடகப் போட்டி நடை பெறும். .

4:2:2 கீழே பரிந்துரைக்கப்பட்டவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து உரையாடல்கள் மற்றும் பாடல்கள் அடங்கிய நாடகத் தொடர்ச்சியின் ஒரு பகுதி கருத்து வேறுபடாமல் தயாரிக்கப்பட்ட (நூர்த்தி) நாடகமொன்றை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(அ) சட்டத்தரணி ஜோன் டி சில்வா அவர்களின் ஸ்ரீ விக்ரம, சிறி சங்கபோ, வெஸ்ஸன்தர மற்றும் ராமாயனம்.

(ஆ) சார்ஸ் டயஸ் அவர்களின் விதுர மற்றும் பத்மாவதீ

4:2:3 திரை அழைப்புடன் கூடிய (Curtain Call) நடிப்புக்கான காலம் 25-30 நிமிடங்களுக்கிடையில் இருக்க வேண்டும்.

4:2:4 நவீன நடிப்பு முறை உத்திகளைப் பயன்படுத்த அவகாசம் இருப்பினும், சம்பிரதாய முறைமையை பாதுகாத்து படைப்பாற்றல்களை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

4:2:5 தயாரிப்புகளுக்காகத் தேரந்தெடுக்கப்பட்ட **(நூர்த்தி)** நாடகப் பகுதியுடன் கூடிய 02 பிரதிகளை பிரதேச மட்டத்திலான போட்டியின் போது நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4:3 நீண்ட நாடகப் பிரிவு

4:3:1 மேற்குறிப்பிட்ட 3:1:1, 3:1:2, 3:1:3, 3:1:4, மற்றும் 3:1:6 என்பன இது தொடர்பாக செல்லுபடியாகும்.

4:3:2 திரை அழைப்புடன் கூடிய (CurtainCall) நடிப்புக்கான காலம் 60-90 நிமிடங்களுக்கிடையில் இருக்க வேண்டும்.

**05 பொதுவான நிபந்தனைகள் :**

5:1 ஒரு பாடசாலை அனைத்து போட்டிகளிலும் பங்கு பற்றலாம். அப்படியெனில், விண்ணப்பப் படிவத்தின் ஒரு பிரதியை பாவித்து வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும்.

5:2 எந்தவொரு படைப்பிலும் பங்கேற்கக் கூடிய நடிகர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை 03 ஆகும். அதனோடு தொடர்புடைய குறு மற்றும் நூர்த்தி நாடக பிரிவுகளில் பிற நடிகர்கள், பின்னணி உதவிக் கலைஞர்களின் எண்ணிக்கை 15ஐ விட அதிகரித்தலாகாது. அத்தோடு நீண்ட நாடகப்பிரிவில் 20க்கு அதிகமாக இருக்கக்கூடாது. நாடகத்தோடு தொடர்புடைய ஆசிரியர், மாணவ மாணவிகளின் எண்ணிக்கையும் இந்த எண்ணிக்கைக்குள் அடங்கும்.

5:3 நாடகத்தோடு தொடர்புபடுத்திக் கொள்ளக் கூடிய அதிக பட்ச கலைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், அதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்கள் எழுத்து மூலம் முன்வைத்து, மாகாண மட்டத்திலான சுற்றின் தீர்ப்புக்கு முன் டவர் மண்டப அரங்க மன்ற பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற வேண்டும். 10-13 ஆம் தர மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

5:4 விண்ணப்பதாரி ஒருவர் எந்த ஒரு காரணத்தினாலாவது வேறொரு பாடசாலைக்கு மாறிச் சென்றிருந்தால் இரு பாடசாலைகளினதும் அதிபர்களின் இணக்கப்பாட்டிற்கு ஏற்ப விண்ணப்பதாரி தான் விரும்பிய பாடசாலை மூலமாக தமது படைப்பை சமர்ப்பிக்கலாம். ஆனால் அது தொடர்பாக அதிபர்கள் இருவரினதும் இணக்கத்துக்கான எழுத்து மூலங்கள் குறித்த அதிபர்கள் மூலம் டவர் மண்டப அரங்க மன்ற பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5:5 எந்தவொரு நாடகப் போட்டிக்காவது சமர்ப்பித்த எந்தவொரு குறுகிய நாடகப் பிரதியையேனும் இந்தப் போட்டிக்கு சமர்ப்பிக்கக் கூடாது. அத்தோடு வேறொருவருடைய பிரதியை அல்லது மாற்றியமைக்கப்பட்ட பிரதியை அல்லது தவறான முறையில் சமர்ப்பித்திருந்தால் அது தொடர்பாக குறித்த அதிகாரிகளுக்கு அறிவித்து போட்டியிலிருந்து அந்த நாடகத்தை நீக்கி விட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால், அத்தகைய செயற்பாடுகளை முழுமையாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

5:6 இப்போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் நாடகத்தை மற்றுமொரு போட்டிக்கும் சமர்ப்பிப்பதானால், அப்போட்டிக்கு சமர்ப்பிக்க முன் டவர் மண்டப அரங்க மன்ற பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5:7 அனைத்து நாடகங்களினதும் மேற்பார்வையை விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் பாடசாலை ஆசிரியரொருவரின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் நடிப்பு, பாடல், நடனம் என்பவற்றுக்கும் அதே பாடசாலையின் மாணவ மாணவிகள் பங்குபற்ற வேண்டும்.

5:8 குறுகிய மற்றும் நீண்ட நாடகப் பிரதிகளை அந்தந்த பாடசாலைகளின் ஒரு ஆசிரியர் மாணவர் ஒருவரால் எழுதலாம்.

5:9 நாடகத்துக்குத் தேவையான இசை, வாத்தியம், ஒலி அமைப்புக்கள், உடை அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து துணை அம்சங்களும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் அல்லது மாணவ மாணவிகள் முன்வைக்கத் தவறினால், அதற்காக நாட்டின் ஏதாவது ஒரு அரசாங்கப் பாடசாலையின் ஆசிரியர்கள் அல்லது மாணவ மாணவிகளை அதற்காக சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதற்காக அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பாடசாலையின் அதிபரினால் எழுத்து மூலம் அனுமதி வழங்கப் பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட கடிதங்கள் நாடக அரங்கேற்றத்துக்கு முன்னர் நடுவர் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.

5:10 சகல போட்டி மட்டங்களிலும் வழங்கப்படடிருக்கும் திகதியில், குறிப்பிட்ட நேரத்தில் சரியாக தமது நாடகத்தை தீர்வுக்காக முன்வைக்க வேண்டியது இயக்குனரின் கடமையாகும்.

5:11 மாகாண மட்டத்திலான தீர்வுகளுக்கு நாடக விண்ணப்பத்தை சமர்ப்பித்த பாடசாலையில் இருந்து அல்லது அந்த நாடகத்தை இயக்குனரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேடையிலிருந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தருணத்தில் அந்த நாடகத்தை பொதுமக்களின் காட்சியாக அரங்கேற்ற அவகாசம் இருப்பதோடு, அங்கு நடுவர் குழுவுக்காக முன்னால் 05 ஆசனங்கள் ஒதுக்கப் பட வேண்டும்.

5:12 இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்படும் நாடகங்கள் கொழும்பிலுள்ள டவர் அல்லது எல்பிஸ்டன் அரங்கேற்ற மண்டபத்தில் நடாத்தப்படும்.

5:13 **விண்ணப்பங்களை அனுப்பிய பின் சகல நாடகங்களினதும் தயாரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட வேண்டும்.**

5:14 மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை மீறினால் அந்த நாடகமானது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் போட்டியிலிருந்து நீக்கும் அதிகாரம் டவர் மண்டப அரங்க மன்றத்துக்கு உரித்தாகும்.

5:15 போட்டி ஒழுங்கமைப்பு நடுவர் குழுவை நியமிப்பது, தீர்ப்புகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்தல், போட்டி நிபந்தனைகளை மீறல் மற்றும் ஒழுங்கமைப்பு தொடர்பான சகல தீர்வுகளையும் எடுக்கும் பொறுப்பு டவர் மண்டப அரங்க மன்றத்துக்கு உரித்தாகும்.

5:16 நடுவர் குழுவினரின் தீர்ப்பு இறுதியானதும் தீர்மானமிக்கதுமாகும்.

**06 போட்டிகள் நடைபெறும் முறை :**

**6:1 படிமுறை ஒன்று – விண்ணப்பங்களைக் கோரல் மற்றும் ஒரு நாள் கருத்தரங்கு**

6:1:1 டவர் மண்டப அரங்க மன்றம், தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் இணைய தளங்கள் மூலமும், டவர் மண்டப அரங்க மன்றத்தின் பிரதான காரியாலயத்திலும் சுற்று நிருபங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

டவர் மண்டப அரங்க மன்றம் - www.towerhall.lk

தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு - www.heritage.gov.lk
கல்வி அமைச்சு - www.moe.gov.lk)

6:1:2 **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி.**
பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.

6:1:3 **விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய கடைசித் திகதி 2022 மே 27 ஆம் திகதியாகும்.**

6:1:4 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான இயக்குனர்கள், நாடக எழுத்தாசிரியர் மற்றும் இசை அமைப்பாளர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு 2022 ஜுன் மாதம் நடைபெறும்.

6:1:5 இந்த ஒரு நாள் கருத்தரங்கில் நாடகப் பணிப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

6:2 **படிமுறை இரண்டு - மாகாண மட்டப்போட்டிகள்**

6:2:1 முதலாம் படிமுறை கருத்தரங்கில் பங்கு பற்றிய நாடக இயக்குனர்களின் நாடகங்கள் இங்கு உட்படுத்தபடும்.

6:2:2 போட்டிகள் 2022 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களின் வார இறுதி நாட்களில் அந்தந்தப் பாடசாலைகளுக்குச் சென்று நடாத்தப்படும்.

6:2:3 இப்போட்டியில் முன்வைக்கப்படும் நாடகங்களில் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்படும் நாடகங்களில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழுங்கப்படும்.

6:2:4 நாடகப் பிரிவுகள் 04 இல் இருந்து புள்ளிகளின் அடிப்படையில் சிறந்த 10 நாடகங்கள் அடிப்படையில் 40 நாடகங்கள் இறுதிச்சுற்றுக்கு தெரிவு செய்யப்படுவதனால் பரிபூரணமான ஒரு தயாரிப்பு இத்தருணத்தில் எதிர் பார்க்கப்படுகின்றது.

6:2:5 இக்கட்ட போட்டித் தீர்வுகளுக்கு நியாயமான ஒரு காரணத்தினால் சமூகமளிக்க முடியாத நிலைமை இருப்பின், அது தொடர்பாக சரியாக 07 நாட்களுக்கு முன் டவர் மண்டப அரங்க மன்ற பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

6:3 **படிமுறை மூன்று - மூன்று நாள் வதிவிட கருத்தரங்கு**

6:3:1 இக்கருத்தரங்கு இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்களின் இயக்குனர்களுக்கு 2022 நவம்பர் மாதம் நடைபெறும்.

6:3:2 நியாயமான ஒரு காரணத்தினால் இந்த கருத்தரங்குக்கு குறித்த பணிப்பாளருக்கு பங்கேற்க முடியாதிருப்பின் அதற்காக நாடகத்தோடு தொடர்புடைய மற்றுமொரு ஆசிரியர் பங்குபற்ற வேண்டும். அவ்வாறு பங்கு பற்றாத நாடகம் இறுதிச் சுற்றிலிருந்து நீக்கப்படும்.

6:3:3 இக்கருத்தரங்கில் பாடசாலை மாணவ மாணவிகள் பங்குபற்ற முடியாது.

6:4 **படிமுறை நான்கு - இறுதிச் சுற்று**

6:4:1 இப்போட்டி 2023 பெப்ரவரி மாதத்தில் கொழும்பில் நடைபெறும்.

6:4:2 இதில் பங்கு பற்றும் சகல நாடகங்களுக்கும் பங்குபற்றுதலுக்கான சான்றிதழகள் வழங்கப்படும்.

6:4:3 இச்சுற்றில் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல நாடகங்களுக்கும் போக்குவரத்துச் சலுகை கொடுப்பனவும், நாடக இய்குனருக்கு 7500.00 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும்.

6:4:4 போட்டி நிகழ்ச்சிகளின் போது மதிப்பீட்டு புள்ளிகளின் மட்டத்தை பூரணப்படுத்தாத ஆக்கங்கள் மற்றும் தனிப்பட்ட திறன்கள்

பிரபல்யமாகாவிட்டால், அதற்குரிய விருதுகளோ பரிசுகளோ பரிந்துரைக்காது இருக்க நடுவர் குழுவிற்கு முடியும்.

6:5 படிமுறை ஐந்து - விருதுகள் மற்றும் பரிசுகளை வழங்கல்

6:5:1 2023 மே மாதத்தில் கொழும்பில் கோலாகாலமாக நடைபெறும்.

6:5:2 இவ்விழாவுக்கு மாணவ மாணவிகள் பாடசாலை சீருடையுடனும் ஆசிரிய ஆசிரியைகள் விழாவின் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையிலும் பொருத்தமான உடையில் வருகை தருவது மிக முக்கியமாகும்.

6:5:3 பணப் பரிசுளுக்கு மேலதிகமாக விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

6:5:4 பிரதான பரிசுகளுக்கும் விருதுகளுக்கும் மேலதிகாக நடுவர்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டால் அதற்காகவும் பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படும்.

07 விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கல் :

| போட்டி நிகழ்ச்சி | (நுர்த்தி) நாடகக் காட்சிகள் (சிங்கள மொழி மூலம்) | குறு நாடகம் (சிங்களம் மற்றும் தமிழ்) | நீண்ட நாடகங்கள் (சிங்களமொழி மூலம்) |
|---|---|---|---|
| சிறந்த இசை இயக்குனர் | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 |
| சிறந்த பின்னணி மேடை அமைப்பு | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 |
| சிறந்த நாடக உடை அமைப்பு | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 |
| சிறந்த கட்டுரை அமைப்பு | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 |
| சிறந்த துணை நடிப்பு ( நடிகை) | ரூபா. 10,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 10,000.00 |
| சிறந்த துணை நடிப்பு ( நடிகர்) | ரூபா. 10,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 10,000.00 |
| சிறந்த நடிப்பு ( நடிகை) | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 |
| சிறந்த நடிப்பு ( நடிகர்) | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 15,000.00 |
| சிறந்த பிரதி 3 ஆம் இடம் | _ | ரூபா. 8,000.00 | ரூபா. 15,000.00 |
| சிறந்த பிரதி 2 ஆம் இடம் | _ | ரூபா. 15,000.00 | ரூபா. 20,000.00 |
| வருடத்தின் சிறந்த பிரதி | _ | ரூபா. 20,000.00 | ரூபா. 25,000.00 |
| வருடத்தின் சிறந்த இயக்குனர் | ரூபா. 25,000.00 | ரூபா. 25,000.00 | ரூபா. 25,000.00 |
| சிறந்த தயாரிப்பு 3ஆம் இடம் | ரூபா. 20,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 25,000.00 |
| சிறந்த தயாரிப்பு 2ஆம் இடம் | ரூபா. 25,000.00 | ரூபா. 20,000.00 | ரூபா. 25,000.00 |
| சிறந்த தயாரிப்பு 1 ஆம் இடம் | ரூபா. 30,000.00 | ரூபா. 25,000.00 | ரூபா. 30,000.00 |

கல்வி அமைச்சும் டவர் மண்டப அரங்க மன்றமும் இணைந்து நடாத்தும் இப் போட்டியை வெற்றி பெறச் செய்ய உங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

பேராசிரியர் கே. கபில. சீ.கே. பெரேரா
செயலாளர்,
கல்வி அமைச்சு.

| மாகாணம் | இலக்கம் |
| --- | --- |
| | |

# தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

## கல்வி அமைச்சு

## மற்றும்

## டவர் மண்டப அரங்க மன்றம்

### அகில இலங்கை சிங்கள மற்றும் தமிழ் மொழி பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டிகள்- 2022

### விண்ணப்பப் படிவம்

போட்டிப் பிரிவு :.......................................................................................................

நாடகத்தின் பெயர் :.......................................................................................................

பாடசாலையின் பெயர்:.......................................................................................................

மாகாணம் :........................................................ மாவட்டம் :.....................................

01. விண்ணப்பதாரரின் பெயர் : திரு/திருமதி...............................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :...........................................................................

முகவரி :.......................................................................................................

தொலைபேசி இலக்கம் : வதிவிடம்.................................. கையடக்க...............................

02. பிரதி எழுதியவரின் பெயர் : திரு/திருமதி...............................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :...........................................................................

முகவரி :.......................................................................................................

தொலைபேசி இலக்கம் : வதிவிடம்.................................. கையடக்க...............................

03. நெறிப்படுத்தபவரின் பெயர் : திரு/திருமதி..........................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................

04. முகவரி :..........................................................................................................

..........................................................................................................................

தொலைபேசி இலக்கம் : வதிவிடம் .................................... கையடக்க..................................

05. சங்கீதம் நெறிப்படுத்துபவரின் பெயர் : திரு/திருமதி.............................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................

முகவரி :..............................................................................................................

..........................................................................................................................

தொலைபேசி இலக்கம் : வதிவிடம்................................ கையடக்க.......................................

06. பாடசாலையின் முகவரி :.......................................................................................

தொலைபேசி இலக்கம் :..........................................................................................

07. வலயக் கல்வி அலுவலகம் மற்றும் முகவரி :.............................................................

தொலைபேசி இலக்கம் :..........................................................................................

08. பாடசாலைக்கு அண்மித்துள்ள முக்கியமான நகரம் :..................................................

09. முக்கிய நகரத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் :...................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய அளவு உண்மையானவை எனவும். போட்டிக்கான நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு இந்த நாடகம் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகிறது எனவும், இந்த நாடகப் பிரதி வேறு எவராலும் இதற்கு முன்னர் எழுதப்பட்டதோ அல்லது நெறிப்படுத்தப்பட்டதோ அல்லது இலங்கையில் எந்த ஒரு நாடகப் போட்டிக்கும், எந்த மட்டத்திலாவது முன்வைக்கப்பட்ட நாடகப் பிரதியோ இல்லையென உறுதிப்படுத்தி வெளிப்படுத்துவதுடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது என இந்த நாடகப் போட்டியின் எந்த ஒரு கட்டத்திலும் தெரியவருமானால், மேலே கூறப்பட்டுள்ள நாடகத்தை இந்தப் போட்டியிலிருந்து அகற்றி விடுவதற்கு டவர் மண்டபத்திரையரங்கு மன்றத்திற்கு உள்ள உரிமையை ஏற்றுக்கொள்வதுடன், இந்த நாடகம் தொடர்புடைய அனைத்துக் கலைஞர்களும் குறித்த நிபந்தனைகளுக்கு ஏற்பத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எனவும், இந்த தயாரிப்பில் நடிப்பில் பங்குகொண்டுள்ள அனைவரும் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் எனவும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகின்றேன்.

.......................................

திகதி

.......................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

மேலே தரப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப இந்த நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த நாடகத்தில் நடிப்பில் பங்கு கொள்ளுகின்ற அனைத்து மாணவ மாணவியர்களும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பவர்கள் எனவும், இந்த நாடகத்தின் விண்ணப்பதாரர், மற்றும் நாடகத்தை நெறிப்படுத்தியவர் இந்தப் பாடசாலை ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்தவர் எனவும், விண்ணப்பம் என்னுடைய பூரண அனுமதியுடன் முன்வைக்கப்படுகின்றது எனவும், நாடகத்தைத் தயாரித்து முன்வைப்பதற்கான அனுமதியையும் அனுசரணையையும் வழங்குவதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.......................................

அதிபரின் பெயர்

அலுவலக முத்திரை

.......................................

அதிபரின் கையொப்பம்

.......................................

திகதி